செ.வெ.எண்: 345 நாள்: 18.06.2021

**பட்டுக்கோட்டை , பேராவூரணி பகுதிகளில் கொரோனா தடுப்பு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு.**

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை, பேராவூரணி பகுதிகளில் கொரோனா தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் இன்று(19.06.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை குறித்து ஆய்வு செய்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் எண்ணிக்கை குறித்தும், அவர்களுக்கு வழங்கப்படும் மருந்து, உணவு மற்றும் வசதிகள் குறித்தும் கேட்டறிந்து பார்வையிட்டார் . அங்குள்ள படுக்கை வசதிகள் குறித்தும் அவற்றில் ஆக்சிஜன் இணைப்புடன் கூடிய படுக்கை வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

தொடர்ந்து பன்னாட்டு ரோட்டரி சங்கம் சார்பில் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்ட ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் இயந்திரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார். இயந்திரம் மூலமாக 20 நோயாளிகளுக்கு தேவையான ஆக்சிஜனை உற்பத்தி செய்யப்படும் எனவும், இதனை வழங்கிய ரோட்டரி சங்க உறுப்பினர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

பின்னர் பட்டுக்கோட்டை குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் செயல்பட்டு வரும் கொரோனா சிகிச்சை மையத்தை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கை குறித்தும் அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறை குறித்தும் கேட்டறிந்தார். மேலும் அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடம் உணவு வழங்கப்படும் முறை குறித்து கேட்டறிந்து உணவின் தரம் குறித்தும், மருத்துவர்கள் முறையாக மருந்துகள் வழங்குகிறார்கலா என கேட்டறிந்தார்.

தொடர்ந்து பேராவூரணி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் செயல்பட்டு வரும் கொரோனா சிகிச்சை மையத்தினை பார்வையிட்டு, மருத்துவர்களிடம் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் குறித்தும் மருத்துவர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் கேட்டு அறிந்து, ஏதேனும் குறைகள் இருந்தால் உடனடியாக தெரிவிக்கவும் அறிவுறுத்தினார்.

**முன்னதாக,பேராவூரணி வட்டம் , சொர்ணக்காடு கிராமத்தை சேர்ந்த திருமதி. மணியம்மை க/பெ. பாஸ்கரன் என்பவர் வாட்ஸ்அப் வீடியோ மூலம் வீட்டுமனைப்பட்டா தொடர்பாக புகார் தெரிவித்ததை தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்படி பேராவூரணி தாசில்தார் நேரில் ஆய்வு செய்து. ஸ்தல ஆய்வில் மேற்படி புலம் புஞ்சை தரிசு வகைபாடு கொண்டது எனவும்.மேற்படி கிராம புஞ்சை தரிசு வீட்டு மனை பட்டா வழங்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 24 மணி நேரத்திற்குள் அவர் கோரிக்கையை ஏற்று வீட்டுமனை பட்டாவினை சொர்ணக்காடு கிராமத்திற்கு சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் நேரில் வழங்கினார். வீட்டுமனை பட்டா வினை பெற்றுக்கொண்ட திருமதி. மணியம்மை அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் நன்றியினை தெரிவித்தார்.**

நிகழ்வின்போது பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.கா. அண்ணாதுரை, பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் திரு. என். அசோக் குமார், கூடுதல் ஆட்சியர் வருவாய் திரு. சுகபுத்ரா என்.ஓ. இ.ஆ.ப., சார் ஆட்சியர் திரு. பாலச்சந்தர் இ.ஆ.ப., சுகாதாரத்துறை இணை இயக்குனர் மரு. திலகம், தலைமை மருத்துவர் மரு. அன்பழகன், ரோட்டரி சங்க மாவட்ட ஆளுநர் திரு சேது குமார், வட்டாட்சியர்கள் திருமதி ஜெயலட்சுமி, திருமதி தரணிகா, ரோட்டரி சங்க உறுப்பினர்கள் மற்றும் மருத்துவர்கள், வருவாய் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு,செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,தஞ்சாவூர்.**